விவசாயிகளுக்குப் பயன் தராது.—சிறு விவசாயிகளுக்கும் பெரு விவசாயிகளுக்கும் மானிய விலையில் உரம், மருந்து போன்றவை கொடுக்கின்ற உதவியைச் செய்வதற்கான முறையிலே அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வேறு திட்டங்கள் இருக்கின்றன. அவைகளின்மூலம் நாம் உதவியைச் செய்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலமாக வேளாண்மைத் துறையுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும், அவர்கள் பிரச்சினைகளைத் தெரிந்துகொள்ளவும் அதன் மூலம் நிவாரணம் பெற்றுத் தரவேண்டும் என்பதும் தான் இந்தத் திட்டத்தினுடைய முக்கியமான நோக்கம்.

மாமண்டூரில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவும் திட்டம்.

* வினா எண் 247—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மதுராந்தகம் வட்டம் மாமண்டூர் கிராமத்தில் Agro Industry மூலம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை துவக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மதுராந்தகத்தில் இப்போது அதைத் துவக்கும் உத்தேசம் இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதற்காக செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் மிகவும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அரசு இதை மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை இயக்குவது தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம். அவர்கள் இத்தகைய தொழிற்சாலைகள் போச்சம் பள்ளியிலும், நாமக்கல்லிலும் இருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்திலே பூனக்குளத்திலே வேலை முடிவு அடையும் தறுவாயில் ஒன்று இருக்கின்றது. ஆகவே மதுராந்தகத்தில் துவக்கத் தேவையில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

பருத்தி தீவிர சாகுபடித் திட்டம்.

* வினா எண் 248—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் தற்போது அமுலில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதற்காக 1981–1982 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) பருத்தி தீவிர சாகுபடி திட்டம் என்ற பெயரில் ஒரு திட்டம் தற்போது அமுலில் இல்லை. ஆயினும் பருத்தி தீவிர சாகுபடி குறித்து தற்போது கீழ்க்கண்ட இரு திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன:

1. தீவிர பருத்தி மாவட்டத் திட்டம்.

2. ஒருங்கிணைந்த பருத்தி பெருக்குத் திட்டம்.

(ஆ) மேற்குறித்த இரு திட்டங்களுக்கு 1981–82 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

தீவிர பருத்தி மாவட்டத் திட்டம். ரூ. 54,67,000
ஒருங்கிணைந்த பருத்தி பெருக்குத் திட்டம். ரூ. 9,17,700

திரு. என் பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் தற்போது அமலில் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் தீவிர சாகுபடித் திட்டம் என்றும் ஒருங்கிணைந்த திட்டம் என்றும் சில திட்டங்களுக்கு ஒதுக்கியிருப்பதாக அவர்கள் சொன்னார்களே எனக்கு அது விளங்கவில்லை, அது என்ன என்று விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதுதான் அதனுடைய நோக்கம்.

திரு என் பழனிவேல்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே பருத்தி நமக்குத் தேவையான அளவு இல்லை என்று சொல்கிறார்கள். இதனால் வெளிமாநிலங்களில் போய் கொள்முதல் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப் பட்டிருக்கிறதா? அம்மாதிரி செய்வதற்கு மத்திய அரசை கேட்டு இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, கொள்முதல் செய்வது இந்தத் துறையின் நோக்கமல்ல.

(முற்பகல் 9.30)

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னர் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது Cotton Corporatio of India அந்தப் பருத்தியை வாங்குவதில் பெரிய முதலாளிகளுக்குச் சாதகமாக இருப்பதால் நம் மாநில சர்க்காரே மாநில அளவில் ஒரு காட்டன் கார்ப்பரேஷனை—மகாராஷ்டிராவிலே செய்வதைப்போல உருவாக்க யோசனை உண்டு என்று சொன்னார்கள். அது எந்த ஸ்டேஜில் இருக்கிறது? அது எப்பொழுது அமைக்கப்படும்?

1982 பிப்ரவரி 18]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அந்த வகையிலே ஒரு திட்டம் அரசிலே மேற்கொள்ளப்பட பரிசீலிக்கப் பட்டது, பருத்தி வாரியம் என்ற வகையிலே நாம் ஒன்றை அமைக்க வேண்டுமானால் பெரும் தொகை தேவைப்படுகிறது; வங்கிகளின் துணை தேவைப்படுகிறது. அவ்வளவு பெருந் தொகை ஒதுக்கத்தக்க நிலையில் மாநில அரசின் நிதி நிலைமை இல்லை. ஆகவே, பருத்தி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்று இதை அமைக்கலாம் என்ற அந்தத் திட்டத்தைக் கூட்டுறவுத்துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிக்கும் பொழுது பருத்தி சாகுபடித் திட்ட மாவட்டம் என்று சொன்னார்கள். எந்தெந்த மாவட்டங்களுக்கு அந்தச் சலுகைகள் கொடுக்கப்படு கின்றன? எந்த வகையில் கொடுக்கப்படுகின்றன என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தீவிரப் பருத்தி மாவட்டத் திட்டம் என்பது கோவை, பெரியார், நெல்லை, முகவை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படுகிறது. மத்திய அரசிலிருந்து 50 விழுக்காடு பெற்று நிறைவேற்றப் படுகிறது.

பாஞ்சாலங்குறிச்சிக்கு ஒட்டப்பிடாரம் வழியாகச் செல்லும் சாலையை சீர்செய்யும் திட்டம்.

*வினா எண் 249—திரு. க. பாரமலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி-எட்டயாபுரம் ரோட்டில் குறுக்குசாலை என்னுமிடத்திலிருந்து பிரிந்து பாஞ்சாலங்குறிச்சிக்கு ஒட்டப் பிடாரம் வழியாகச் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் இதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) அண்டு (ஆ) பழுதடைந்த சாலையை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வில்லிவாக்கம் தொகுதியிலுள்ள செங்கல் தயாரிக்கும் தொழிற் சாலைகள்.

*வினா எண் 250—திரு. ஜே. சி, டி. பிரபாகரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

வில்லிவாக்கம் தொகுதியில்—நொளம்பூர், மதுரவாயல், அடையாளம்பட்டு, மேற்கு அண்ணாநகர், அயனம்பாக்கம், பகுதிகளில் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அரசால்

TRUTH ALONE TRIUMPHS